# பொல்லாத சாட்சி

எதிரகத்து ரேணுவின் தோற்றத்தில் ஒரு மாறுதல் பார்த்தேன். தலையைப் போர்த்திய சேலையின் அடக்கமான எழிலும், இதயத்து உவகையை மடலவிழ்த்துக் காட்டும் பூரித்த முகமும் ரேணுவின் அந்தப் பரபரப்புக்கு விளக்கம் கூறின. கொஞ்ச நேரத்திற்கு முன்பு மோட்டார் காரின் ஓசைக் கேட்டதே . . . அப்போது வந்திருக்கிறான் போலும் அவள் கணவன்.

கணவனின் வரவை ரேணு ஒரு வாரமாக எதிர்பார்த்துக்கொண்டிருந்தாள். ஒரு நாள் மாலை ரேணு என்னை நாடித் தேடி வந்து உட்கார்ந்துகொண்டு என்னோடு நெடுநேரம் அளவளாவினாள். அவளுடைய கல்யாணம், புது உறவினர், என் வைர மூக்குத்தி, அவளுடைய காசிப் பட்டுப் புடவை, மணச்சடங்கு சம்பிரதாயங்கள், முதலிய பல்வேறு விஷயங்களைப்பற்றிப் பேசினோம். கடைசியில் ரேணு எழுந்து கிளம்பும்போதுதான் நான் கேட்டேனள், "இன்னும் எத்தனை நாள் நீ இங்கே இருக்க அனுமதி?" என்று. கள்ளச் சிரிப்பு பூத்தபடி தன் இரண்டு கை விரல்களையும் குவித்து மலர்த்தி, மலர்ந்த முகத்தைக் குவித்துக் கொண்டு, "எட்டு, பத்து நாள்!" என்று போகிற போக்கில் சொல்லிவிட்டுப் போனாள். "ஓஹோ!" என்று சிரித்துவிட்டு நின்றேன் நான். நின்ற நிலையிலேயே என் மனதில் ஒரு சஞ்சலம். 'பாவம், அதனால் தானோ இன்று என்னைத் தேடிவந்து உட்கார்ந்து பேசினாள்! நானும் வெறும் பேச்சிலேயே ஆழ்ந்துவிட்டேனே! குமுட்டியை மூட்டி நாலு அப்பளம், வடாம் பொரித்துத் தின்னச் சொல்லத் தெரியவில்லையே! புக்ககம் போய்விடப்போகிறாளே!' என்று என் மனசு அடித்துக்கொண்டது.

அப்புறம் ஓரிரண்டு நாள் ஏதோ பண்ணி அனுப்பினேன். அவளுடைய கணவனும் வந்த பிறகு, இருவரையும் தம்பதியாக அழைத்து இட்லியோ, தோசையோ, காப்பியுடன் தரவேண்டும் என்று என் எண்ணம். அதனாலேயே அவளை சென்ற வாரத்தில் கண்ட போதெல்லாம் "எப்போ வருகிறார்?" என வினவியபடி இருந்தேன். "கல்கத்தாவில் ரொம்ப ரொம்பச் சுற்றுகிறார்!" என்று ரேணு புகாரிட்டாள். நான் இனிமேல் அவளைக் கிண்டல் செய்ய வேண்டியது தான், "குஷி வந்துவிட்டதடியம்மா?" என்று.

வாசலுக்குப் போய் ரேணுவின் முகம் பார்த்து முறுவலிக்க விரும்பினேன். அவள் கணவன்தான் வந்துவிட்டான் என்பதும் ஐயமறத் தெரியவேண்டுமே! உற்று உற்றுப் பார்த்தேன். ரேணுதான் அலைந்து வளைய வந்தாள், வீட்டினுள்ளே, தற்செயலாக இப்பால் திரும்பி ஒரு வழியாக என்னைப் பார்த்துவிட்டாள். என் சைகையின் பாவனை உணர்ந்து, நாணத்துடன் புன்னகைத்து, புடவையை தலைமேல் வகிட்டினருகே நன்றாக இழுத்துவிட்டுக்கொண்டு மறைத்தாள். மணமான பிறகு ரேணு தங்கள் ஜாதிக்குரிய குஜராத்திப் பாணியில் தான் சேலையை உடுத்துகிறாள். ஆனால், இன்று அவள் தலையில் முட்டாக்கு போட்டுக்கொள்ளும் விந்தையை நான் கனிவுடன் ரசித்தேன்.

பிற்பகலில் ரேணுவின் அண்ணனுடன் மாப்பிள்ளை சினிமாவுக்குப் போனார் என்பதை அறிந்துகொண்டேன். "ஏன் உன் அக்காவை அவர் அழைத்துப் போகவில்லை?" என்று ரேணுவின் தங்கையைக் கேட்டேன். "அவள் போக மாட்டேன் என்றாளே!" என பதிலளித்தாள் சிறுமி. "அப்படியா? அடி கிடைக்கும் என்று சொல்லு!" என்று என் கையையே ஓங்கிக் காண்பித்துவிட்டு அவளை அனுப்பினேன். பிறந்தகத்திலேயே இந்த மாதிரிச் சந்தர்ப்பங்களை நழுவவிடலாமா? அசட்டுப் பெண் ரேணுவுக்கு இது தெரியவில்லையே என்பது என் கோபம். பொல்லாத மனம் அன்பினாலேயே கோபமும் காட்டுகிறதே!

சற்றுப் பொறுத்து ரேணுவே வந்தாள். அசட்டுச் சிரிப்பு சிரித்துக் கொண்டு வந்த பெண்ணைக் கண்டதும் பரிவுதான் உண்டாயிற்று எனக்கு.

"சொன்னாளா உன் தங்கை?" என்று வரவேற்றேன்.

"சாவித்ரி பஹன் கோபிக்கிறாள்,' என்று சொன்னாள். நான் இப்பொழுதுதான் வரமுடியும். நாளைக்கு புவனேஸ்வரம் போகிறோம்."

"ஓஹோ. அது சரி, சினிமாவுக்கு நீயும் அவருடன் போகக்கூடாதா? உனக்காகத்தானே வந்திருக்கிறார் அவர்?"

ரேணு புன்முறுவல் மட்டும் செய்து கொண்டிருந்தாள். "'நானும் உன் மாதிரிதானிருந்தேன், தலை தீபாவளிக்கு எங்கள் பாபு வந்தபோது பேசவே போகவில்லை, என் தந்தை கோபித்தார். 'உனக்காக வந்திருக்கிறாரா, பட்சணத்துக்காக வந்திருக்கிறாரா', என்று . . . "

என்னை ஏறிட்டுப் பார்த்துவிட்டுப் புன்னகையைத்தான் செய்தாள் ரேணு. பேசவில்லை.

"அங்கே புக்ககத்தில் சினிமா கினிமா போவாயா? கூட்டிக்கொண்டு போவாரா?"

"போவோம்; எல்லோருமாக,"

"அங்கே எல்லோருமாகச் சேர்ந்து போவீர்கள்; நமக்கும் மற்றவர்களை விட்டுவிட்டு ஜோடியாக போகத் தயக்கமாகவும் இருக்கும். இங்கேயாவது அவரும் நீயுமாகப் போகக்கூடாதோ? உன் அண்ணா 'நான் வரவில்லை' என்று சொல்லியிருக்க வேண்டும்."

"அப்படித்தான் சொன்னான். என்னைத் தான் போகச் சொன்னார்கள். நான் மாட்டேன் என்றேன்."

"ஏன் சொன்னாய், பைத்தியம் மாதிரி!"

பேதைமையனைத்தும் ஒருங்கு திரண்டாற்போல ஒரு பார்வை கண் உயர்த்திப் பார்த்துவிட்டு ரேணு எனக்கு விடையளித்தாள் இப்படி. "இங்கெல்லாம் இப்படி நானும் அவருமாகச் சினிமா போனால், அங்கே போன பிறகும் இருவராகவே போகவேண்டும் என்று ஆசை தோன்றிவிடும், அது நன்றாகயிருக்காது என்று தான்..."

விளங்கிவிட்டது எனக்கு. கண நேரம் பேச்சு தொடர முடியாமல் தடுமாறினேன். அந்தக் கணத்தில் நான் என்னையே ரேணுவாகக் கண்டேன். ஏதோ ஒரு மாமாங்கத்திற்கு முன்பு நான்தான் அப்படி இருந்தேன் என்றால் இன்று ரேணுவும் அதேபோல இருப்பாள் என்று நான் எதிர்பார்க்கவில்லை. பல்லாயிர வருஷங்களாக மாறாத மானிட இயல்பும், பெண்ணியல்பும். சில வருஷங்களில் மாறிவிடக்கூடுமா? பல விஷயங்களில் ரேணுவைப்போல நான்; என்னைப் போல ரேணு. எங்கள் வயது வேற்றுமையை மறக்கடிக்கும் ஒற்றுமைகள் பல உண்டு. எனினும், இப்பொழுது என்னெதிரே நின்ற ரேணு என்னை வியப்பிலாழ்த்தி மகிழ்வித்தாள். என்னுள்ளே சிந்தனைகள் கொப்புளித்தன. கணவன் வந்துவிட்டார் என மகிழும் இளம் மனைவியாக பெற்றோரை மீண்டும் பிரிய நேருவதை எண்ணி வேதனைப்படும் மகளாக, புக்ககம் என்பதன் உண்மைப் பொருளையுணர்ந்து புது மண வாழ்வின் மயக்கம் தெளிந்த மருமகளாக, ஒரு இதயத்தில் பல பகுதிகளை இடம் பொருந்த அமைத்துக்கொண்ட லட்சியப் பெண்ணாகத் திகழ விரும்பும் மங்கையாக, ரேணு என்னெதிரில் நின்றாள். இந்த ரேணுவை நான் ஏழெட்டு வருஷங்களுக்கு முன்பு சிறுமியாகப் பார்த்திருக்கிறேன், இப்பொழுது ரேணு எத்தகைய ஸ்வப்னாவஸ்தையில் இருக்கிறாளோ அத்தகைய அவஸ்தையில் நான் அன்று இருந்தேன்!

கணநேரத்தில் நெடுங் கனவு கண்டாற்போன்று பல நினைவுகளைக் கொண்டவாறு நான், "ரேணு, ஒரு பாட்டு பாடேன்! இந்த விசை நீ பாடிக் கேட்கவில்லை. முன்பெல்லாம் அதோ

அங்கே வாசற்படியில் உட்கார்ந்து ஜம்மென்று எத்தனை பாட்டு பாடுவாய்! உனக்கு அருமையான குரல்தான், ரேணு" என்றேன்.

"அதென்னமோ அக்கா, முன்பெல்லாம் வெட்கமே தெரியாமல் கூடம் நிறைய புருஷர்களிருக்கையில் நடுவில் உட்கார்ந்து பாடியிருக்கிறேன்."

"இப்போ என்னிடம் சங்கோசமில்லையே? பாடு."

"போய், நாளைக்கு புவனேஸ்வரம் போக சாமான்கள் எடுத்து வைக்கணுமே அக்கா.'"

"போகலாம், ஒன்று பாடேன்."

ரேணு சற்று தயங்கிச் சிரித்துக் கொண்டாள். "சினிமாப் பாட்டு வேண்டாமே அக்கா. மீரா பஜன் பாடுகிறேன்," என்று சொல்லிவிட்டு, தனது குழைவான குரலின் மென்மையையெல்லாம் திரட்டி ஒரு கீதமிசைத்தாள் ரேணு. அந்த இனிமையில் உருகி என் கண் பனித்தது. பாடுகிற பழக்கம் அவளிடம் குறைந்துவிட்டாலும், அந்தக் குரலின் தென்றற் குளுமை இன்னும் அதிகமாகவே இருந்தது. எத்தனை அழகுகள், எத்தனை சிறப்புகள், எத்தகைய கலைச் செல்வங்கள் சம்சாரக் கடலில் திவிலைப் போலச் சிறுத்து, மறைத்து போகின்றன? ரேணுவும் ஒருத்தி, முத்துபோல் சம்சாரக் கடலின் அடியில் கிடப்பாள்.

"நான் போகவேண்டும் அக்கா'."

"போகலாம், போகலாம், இரு. ரேணு, முன்பொரு தடவை நீ ஒரு காதல் பாட்டைப் பாடிக்கொண்டு வாசலில் உட்கார்ந்திருந்தாய். அப்பொழுது ரஷிக் வாசலில் போய்க்கொண்டிருந்தான். போகிற போக்கில் பாட்டின் அடுத்த அடியை அவன் பாடிக்கொண்டு போனான், நீ கவனிக்கவில்லை. நான் கவனித்துவிட்டு, 'ரேணுவும் ரஷிக்கும் கல்யாணம் செய்து கொண்டால் ஜோடி பொருத்தமாயிருக்கும்,' என்று நினைத்துக்கொண்டேன். நான்தான் அப்படி நினைத்தேனே தவிர உன் அப்பா அம்மாகூட உன் கல்யாணத்தைப் பற்றி அப்போது யோசித்திருக்க மாட்டார்கள்."

"'ரஷிக் கில்லாடி. ஊர் சுற்றுவான் அக்கா. எங்கள் பாபு வெற்றிலைதான் ரொம்ப அதிகம் போடுகிறார், அதுதான் அவருக்கு ஒரு பழக்கம், வெறி மாதிரி."

இனித்த அன்பில் ஒரு கனுவையும் சுவைக்க வேண்டிய சிரமம் இருப்பதை ரேணுவின் உதடுகள் மடிந்த மடிப்பில் பார்த்தேன். "மெல்லக் குறைத்துவிடு, அந்த வெறியை," என்று சிரித்துவிட்டு, "நாலு நாள் இருப்பீர்களா?" என வினவினேன்.

"உம். பூரியிலிருந்து வரவே மூன்று நாளாகும்."

"ஜமாய், ஜோராகப் போய் வா," என்று அனுப்பினேன் அவளை.

மறுநாள் மோட்டாரில் ரேணு, அவள் கணவன், அண்ணன், சிற்றப்பா நால்வரும் ஏறினார்கள். மாப்பிள்ளை படுசமர்த்தாக மோட்டார் ஓட்டிக்குப் பக்கத்தில் அமர்ந்துவிட்டார். பின்புறம் ரேணு, அண்ணன், சிற்றப்பா.

'பைத்தியங்கள்! சிற்றப்பாவுக்குக் கூடவா மூளையில்லை? பெரியவராயிற்றே! மாப்பிள்ளையை 'உன் இடம் எனக்கு!' என்று கேட்டுப் பிடுங்கக்கூடாதோ?' என்று நான் என் கணவரிடம் அங்கலாய்த்தேன்.

** ** **

எதிர்வீட்டில் சந்தடி அதிகமாகிவிட்டது. ரேணு புக்ககம் போய்விடப் போகிறாள் என்று யார் யாரோ பெண்கள் வந்து பார்த்துவிட்டுப் போனார்கள். கல்யாணம் நடந்த பிறகு குஜராத்திலிருந்தே புக்ககம் சென்றுவிட்டு அப்புறம் இங்கு வந்திருந்தாள் ரேணு. இங்கிருந்து அவள் புக்ககம் போவது இது தான் முதல் தடவை. மாப்பிள்ளை வந்த மும்முரம் வேறு.

காப்பியும், சிற்றுண்டியும் தருவதற்கு அழைக்க வேண்டுமென்று சமயம் பார்த்தேன்; ஒத்து வரவேயில்லை, சரிதான், மாப்பிள்ளைக்கும் எங்களுடன் பழக்கமில்லை. அழைக்க வேண்டாம் என்று முடிவு கட்டினேன். ரேணுவுக்குக் கொடுக்க ஒரு சோளித் துணியை வாங்கி வைத்தேன். ரேணுவுக்கு புடவை, ரவிக்கை விஷயங்களில் அதிக கருத்தும் கவனமும் உண்டு. விதவிதமான அச்சுச் சேலைகளை உடுத்திக்கொள்வதில் எல்லா குஜராத்தியருமே ஆர்வம் உள்ளவர்தாம். ""நீ ஏன் இதுபோல உடுத்துவதில்லை?" என்று ரேணு என்னைக் கேட்டிருக்கிறாள். அது மட்டுமல்லவே. ரேணு என்னிடம் அன்பு நிறைந்த தோழமை கொண்டு பழகுவதற்குச் சான்று ஒன்று இருக்கிறது. "அக்கா, நீ நல்ல துணிகள் தான் வாங்குகிறாய். ஆனால், சிரத்தையாய் தைத்துக்கொள்வதில்லை. நல்ல தையற்காரனிடம் கொடு கொஞ்சம் கூலி அதிகமாக வாங்குகிறவன்தான்; ஆனால், நன்றாகத் தைத்துத் தருவான். ஒரு ஆறு ரவிக்கையாவது நல்ல சில்க்காக, நல்ல மாதிரியில் தைத்து வைத்துக்கொள். நீ அழகாயிருக்கிறாய். இன்னும் கொஞ்சம் சிரத்தையாக உடை உடுத்து ரொம்ப அழகாய் சினிமா நட்சத்திரம்போல இருப்பாய்," என்று ஒரு நாள் என்னிடம் வெகு அக்கறையுடன் சொன்னாள். அவள் சொன்னதை அலட்சியப்படுத்த முடியாமல், நாலு சோளிகளை நீண்ட கைகள் வைத்து உடலோடு ஒட்டின மாதிரி தைத்துக்கொண்டேன். பாங்கான முறையில் உடையுடுத்த வேணும், எனக்கு அசிரத்தை கூடாது என்பதை உணர்ந்தேன். அன்புடையவள் வெளிப்படச் சொன்னாள். அறிமுகமில்லாத பிறர் மனத்தில் குறையாக நினைப்பார்களா, என்னைப் பற்றி?

சிற்றுண்டிக்கு அழைக்க வேண்டுமென்றெண்ணி, "எப்பொது பயணம்? எத்தனை நாள் இருப்பாய்?" என்று அடிக்கடி கேட்டிருந்த நான், சோளித் துணியை வாங்கி வைத்தபின், "ஊருக்குப் போகு முன்பு சொல்லிக்கொண்டு போ; சொல்லாமல் போய்விடாதே!" என்று கட்டளை இட்டுவிட்டு நிம்மதியடைந்தேன். அவள் புக்ககம் செல்லப்போகிறாள் என்பதைப் பற்றி எவ்விதமான சலனமும் தோன்றவில்லை எனக்கு. 'இது சகஜம்' என்ற பாவனையில்தானிருந்தேன். ஆனால் என் கையோ தொடுவானத்தில் தெரியும் தாரகைபோல் 'ரேணு, ரேணு' என்று ஒரு நினைவு மினுக்கியவாறு இருந்தது.

பொழுது புலர்ந்தது. ரேணு போகிறாள். அவள் விடைபெற வந்தால் காப்பி தரலாம் என்று டிக்காஷன் சேர்த்துப் போட்டேன். எதிர் வீட்டு வாசலில் மோட்டார் நிற்கிறதோ என்று பார்த்துக்கொண்டே மற்ற வேலைகள் செய்தேன்.

ரேணு வந்தாள் என்னை நோக்கி. வரவேற்றேன்; உட்கார்த்தினேன். "எப்போது வரப்போகிறாய் என்று, நீ இல்லாதபோதெல்லாம் உன் தாயைக் கேட்பேன். நீ வந்த பிறகு, சமீபத்தில் பத்து நாளாக நான் உன்னைக் கேட்ட கேள்வி, நீ எப்போது போகப்போகிறாய் என்பது. தமாஷாகத்தானே இருக்கிறது?" என்று கேட்டேன்.

ரேணு புன்னகை செய்தாள். ஆனால், கண்கள் கலங்கக் காட்டின. இமை கனத்து, விழிகள் பாதி மூடிக்கொண்டிருந்தன. ரேணுவின் வருத்தத்தை நான் அறிந்துகொண்டாலும், என் மலர்ச்சியைக் காட்டி, 'உலகமே இப்படித்தான்' என்பதை அறிவுறுத்தும் வகையில் நடந்துகொள்ள விரும்பினேன். இன்னும் சில கேள்விகள் கேட்டு, சிறு சிறு விடைகளையும் அவளுடைய உதட்டிலிருந்து வரவழைத்தேன். உடன் வந்திருந்த ரேணுவின் தங்கையைக் கைப்பிடித்து, "நீயும் இப்படித்தான் ஒரு நாள் ஓடிப்போவாய் எங்களைவிட்டு!" என்று சொல்லிவிட்டு, "ரேணு, உன் தங்கையை அவள் பிறந்தது முதல் பார்க்கிறேன். ஆனால், அவள் புக்ககம் சென்றால் வருத்தப்படுவேனோ என்னமோ தெரியாது. நீ போகிறாய் என்பதுதான் வருத்தமளிக்கிறது. நாம் அப்படி பழகிவிட்டோம்," என்றேன்.

எச்சிலை விழுங்கிக்கொண்டு ஏக்கத்துடன் என்னைப் பார்த்துவிட்டு ரேணு தலை குனிந்தாள். "நான் போகணும் அக்கா'," என்று சொன்னாள் உருக்கமாக.

"காப்பி வைத்திருக்கிறேன் ரேணு, குடியேன்?"

"வேண்டாம் அக்கா. என்னவோ பண்ணுகிறது எனக்கு. பழக்கமில்லையே காப்பி," என்று தன் நெஞ்சைத் தடவிக்கொண்டாள் ரேணு, தீனமாக.

"சரி, வேண்டாம். சற்று நேரம் உட்காரேன்."

"போகணும் அக்கா. மாமி வீட்டில் சொல்லிக்கொள்ளப் போகணும்."

"அப்ப இரு, குங்குமம் தரேன்."

சோளித்துணியை வைத்திருந்த தாம்பூலத் தட்டை நீட்டி குங்குமமிட்டேன்.

"இதெல்லாம் எதற்கு அக்கா? எத்தனை தருவாய்!"

"வேறென்ன தந்தேன்?"

"ப்ளாஸ்டிக் டப்பி, ஸ்டீல் ஸ்பூன் . . . "

"அது ஒரு கணக்கா ரேணு? சிறு சிறு பொருள்கள். இது உனக்காகவே வைத்திருக்கிறேன். எடுத்துக்கொள்."

கை நீட்ட முயன்று தயங்கினாள் ரேணு. "ஏன் தயக்கம் ரேணு. நீ என் தங்கை மாதிரி?"

என்னை ஊன்றி ஏறிட்டுப் பார்த்துவிட்டு, பெற்றுக்கொண்டாள் ரேணு, என் அன்புப் பரிசை.

"நான் வரேன் அக்கா?"

"சரி, போய் வா; சந்தோஷமாயிரு," என்றவாறு ரேணுவின் தோள்களைப் பற்றிக்கொண்டு அவளைப் பின் தொடர்ந்தேன்.

திடீரென்று ரேணு நின்று திரும்பினாள். அப்படியே என் தோளில் - இடது புற மார்பில் சாய்ந்து, முகம் புதைத்து, 'சாவித்ரி பஹன்!' என்று விம்மினாள். கேவலில் தொடங்கிய ஒலி மெல்ல மெல்ல விசும்பலில் இறங்கிற்று. 'ரேணு, ரேணு' என்று பதறிவிட்ட நானும், அவளுடைய முதுகைத் தடவி அழுதேன். வயதில் பெரியவள் நான் என்ற உணர்வு கொண்டவளாய் நான் அவளைத் தேற்றலானேன். "அழாதே ரேணு, அழாதே. சந்தோஷமாய் போய் வா. நீ வரவேண்டும், வரவேண்டும் என்று எதிர்பார்த்திருந்த நானே, நீ போவதை அனுமதித்து விடை கொடுக்கிறேன் பார்; வேறு என்ன செய்ய முடியும்?" என்று வாயில் வந்ததைச் சொல்லி தேறுதல் கூறினேன்.

ரேணு முகத்தை எடுக்காமல் விம்மினாள். "அழாதே ரேணு. போய் வா, போ; வருத்தப்படக்கூடாது."

சட்டென விலகிக்கொண்ட ரேணு, "வரேன், அக்கா" என்று சொன்னவாறு என்னைத் திரும்பிக்கூடப் பாராமல் நடந்து படியிறங்கி விடுவிடுவென நடந்து சென்றாள்.

"போய் வா, போ" என்று நான் உந்தினேனே, ரேணு மனம் நொந்ததோ? சட்டென விலகினாளே!

அங்கேயே கிடந்த நாற்காலியில் அப்படியே பொத்தென்று உட்கார்ந்துவிட்டேன். ரேணுவின் தலை சாய்ந்திருந்த என் இடதுபுறத் தோளைத் தொட்டுப் பார்த்தேன். மார்பில் கை வைத்தபடி மலைத்தேன். என்னுடல் புல்லரித்தது. இதயம் பூரித்தது. 'கண்மணி ரேணு என் மார்பில் முகம் புதைந்து அழுதாள்,' என்ற நினைப்பிலே, ஒரு இன்பக் கிளர்ச்சி அலை புரண்டது. மோட்டாரில் அவள் ஏறும் வரை என் வீட்டு வாசலில் நின்றிருந்து "போய் வா, ரேணு; சீக்கிரம் வா," என்று சொல்லி தோழியின் முகம் பார்த்து விடை கொடுத்தேன்.

நினைக்க நினைக்க இனித்தது. எண்ண எண்ண மணத்தது. ரேணு விக்கியழுது புலப்படுத்திய அன்பைச் சுவைத்துக் கொண்டிருந்த எனக்கு ஒருபுறம் பெருமையும் உண்டாயிற்று. எல்லா விஷயங்களையும் கணவரிடம் விவரித்து விளம்பும் வழக்கமுடைய

நான், இதைப் பற்றி சுருக்கமாய்க் கூறினேன். "பாவம், ரேணுவுக்கு அழுகையாய் வந்தது," என்றேன் பொதுவில். நான் உணர்ந்த உவகையை அவருக்கு விளக்க சாத்தியமா?

** ** **

முற்பகல் தபாலில் தமிழ்ப் பத்திரிகைகள் வந்தன. அவற்றைப் பிரிக்கக் கூட விரும்பவில்லை நான். உள்ளத்தில் குமிழியிட்ட இன்பச் சுழிப்பை மற்ற நிகழ்ச்சிகளுடன் இழுத்துப் போட்டு ஒன்றாக்க மனம் வரவில்லை. ரேணுவின் முகம் பதித்த என் இதயத்தில் இந்த ஓர் நாளாவது பிற விஷயங்கள் தலையிடக்கூடாது. இதுதான் என் முடிவு.

"இன்று சர்க்கஸுக்குப் போகலாமா? நாளைக்கு கடைசி நாளாம்," என்றார் கணவர்.

"வேண்டாம்; மூன்று வாரங்கூட நிலைக்காத சர்க்கஸ் ஒரு சர்க்கஸா? அப்படியும்தான் நாம் என்ன குழந்தைகளா?" என்று நான் அளித்த பதிலைக் கேட்டு என் கணவர் வியப்பினால் மறு பேச்சுப் பேசவில்லை!

சற்று நேரங்கழித்து வாசலில் பார்த்தேன். எதிர் வீட்டு மோட்டார் நிற்கிறது. ரேணுவின் தாய், சித்தி, தங்கைகள், தம்பிகள் எல்லோரும் காரில் ஏறுகிறார்கள். அவர்களது முகங்களில் மகிழ்ச்சியில்லையெனினும், வெளியில் புறப்பட்டுப் போகிற பரபரப்புப் சிரத்தையும் தெரிந்தன. போகவேண்டிய அவசியமிருந்தால் போகவேண்டாமா? ரேணுவைப் பிரிந்த வருத்தத்தைக் கொண்டாடிக்கொண்டிருக்க முடியுமா?

இரண்டு நாட்களுக்குப் பிறகு ரேணுவின் அன்னையைத் தேடிக்கொண்டு போனேன். "போய்ச் சேர்ந்திருப்பாளா? கடிதம் இரண்டு நாளில் வருமல்லவா!" என்று விசாரித்தேன்.

"இன்று தந்தி வந்துவிட்டது. சுகமாய்ப் போய்ச் சேர்ந்துவிட்டார்கள். அவள் கடிதம் எழுதுவதற்குப் பத்துப் பதினைந்து நாள் ஆகாதா?" என்றாள் தாயார் வருத்தமுடன்.

"ஒரு கார்டாவது சீக்கிரமாக அவள் தன் கைப்பட எழுதினால் நன்றாயிருக்கும்; எங்கே பாவம்," என்று நானும் இழுத்தேன்.

"எனக்கு வீட்டிலிருக்கவே பிடிக்கவில்லை, இரண்டு நாளாக. முந்தா நாள் முழுதும் இந்தக் குழந்தைகளும் பித்துப் பிடித்த மாதிரி ஒரே அழுகை. அதுகள் வருத்தத்தை மறக்கடிப்பதற்காக சர்க்கஸுக்குப் போனோம். மறுநாள் அதுகளின் போக்கில் விளையாட்டும் சுறுசுறுப்பும் கொண்டுவிட்டன. எனக்கு அவ்வளவு விரைவில் மனசு தெளிகிறதா! நேற்றும் வீடு தங்காமல் மானேஜர் வீட்டுக்கும் கோயிலுக்குமாகப் வீட்டுக்கும் கோயிலுக்குமாகப் போய் வந்தாயிற்று."

'அப்படியா?' என்று மனதில் பிறந்த வினாவை சற்று அடக்கி வைத்துக்கொண்டு, "அப்படித்தானிருக்கும் எனக்கே ரேணுவின் பிரிவு ரொம்பப்படுத்திவிட்டது. என்ன இருந்தாலும் அவளுடைய குணமே அலாதி. அவள் மாதிரி பிரியமும் ஒட்டுதலுமாக இருப்பது எல்லோருக்கும் சாத்தியமில்லை," என்று ரேணுவைப் பற்றி என் மனத்திருப்திக்கும், பெற்றவளின் மனநிறைவுக்கும் பொருந்த சற்று நேரம் உரையாடிவிட்டு வீடு மீண்டேன். ஆனால் என் மனதில் ஏனோ குழம்பிய சிந்தனை. ஏனோ என்பதென்ன! காரணம் தெரிந்துதானிருந்தது.

ரேணுவிடம் எனக்கு அன்பு; அவளுக்கும் எனக்குமிடையே நட்பும், அன்பும் வலிமையானவை; ரேணுவும் நானும் அன்புமிகுந்த தோழியர் - இப்படி எல்லாம் இறுமாறுகிறேனே - எல்லாம் பிரமையோ! எதிர்வீட்டினர் ரேணுவின் பிரிவைப் பற்றி மருகிற வேதனை தாங்கொணாமல், பிரிவுத் துன்பம் மறந்திருக்க சர்க்கஸுக்குப் போனார்களாமே! நான் ரேணுவின் பிரிவுக்குப் பிறகு, அந்தப் பிரிவினால் ஏற்பட்ட இன்பத்தை மறந்திருக்கக்கூடாதென்று தானே சர்க்கஸ் பார்க்க விரும்பவில்லை? நான் எப்படி அன்புடையவளானேன்? உயிராலும் உதிரத்தாலும் பிணைப்பட்ட உறவால்

அன்புடையவர்களுக்கும், என்னைப்போல் பழக்கத்தினால் அன்பு கொண்டவர்களுக்கும் எத்தனை வேற்றுமை! அவர்களின் அன்புக்கு ஈடாகுமா என் அன்பு? ரேணு என் மேல் சாய்ந்து அழுததும், பிறந்தகத்துச் சூழ்நிலையில் ஒருத்தியாகிய என்னிடம் அவள் தன் வேதனையைப் புலப்படுத்தியதும் எனக்குப் பெருமிதமளித்ததனால், அவளுடைய துன்பத்திலன்றோ இன்பமுண்டாயிற்று எனக்கு? இதுவோ என் அன்பு! ஓர் நாள், இருநாள், அனுதாபமாக, அபிமானமாக, ரேணுவைப் பற்றிச் சிந்தித்திருந்துவிட்டு, பிறகு என் போக்கிலே காரியம், கவனம் எல்லாம் திசை திரும்பிவிட்டனவே!

ஹூம், இப்படியும் ஒரு வினா என் நெஞ்சத்திலே எழவேண்டுமா?

பூச்செடியிலே பூத்துக்குலுங்கும் புஷ்பங்களிருக்க, செடியினடியிலே தோன்றிய களைப்பூண்டின்மேல் என் கவலை பதிந்ததற்காக வருந்தட்டுமா? பிடுங்கிப் போட்டுவிட எத்தனை நேரம்? பழகி வளர்த்த அன்பு; எமது ஜாதி வேறு, மொழி வேறு, உணவு, உடை வேறு, வயதும், வளர்ச்சியுங்கூட வேறு என்ற வேற்றுமைகளையொழித்த நிலையில், அவளும் நானும் அக்காள் தங்கையென்று பேசிப் பழகி அன்பினைப் புலப்படுத்திக் கொண்டோம். பிரிவு நேர்ந்ததும் கலங்கிக் கண்ணீர்ச் சோர அணைந்தோம். அது பொய்யா? சும்மாவா? உணர்ச்சி, உதட்டளவில் வெளிப்பட்டதா? பால் தொட்டுப் பால் கறப்பது போல, அன்பைத் தொட்டுத்தான் அன்பைச் சுரக்க வைத்தோம். அற்பமானதொரு களைப்பூண்டுபோல ஒரு கேள்வி தோன்றினதற்காக மலைக்கிறேனே அறிவிலி!

என் சிந்தனையைக் கலைத்துக்கொண்டு வந்தார் கணவர். "இந்தா பேனா; சரி பண்ணி வந்திருக்கு. இனி யார் கேட்டாலும் அந்த ஒன்றரை ரூபாய் பேனாவையே கொடு. இதைத் தராதே!" என்றார்.

"நன்றாகத்தானிருக்கிறது போங்கள்!" என்று கடிந்து முகத்தைத் திருப்பிக் கொண்டேன். கோபம்தான் வந்தது. ஒரு நாள் நான் எழுதிக்கொண்டிருந்த சமயம் ரேணு வந்து பேனா கேட்டாள். உள்ளே உபரியாக இருந்த மட்ட விலைப் பேனாவை என் மதிப்பிற்குரியவளிடம் கொடுக்க விரும்பாமல் என் கைப்பேனாவையே கொடுத்தேன். அது அவளிடமிருந்து திரும்பியபொழுது முனை சரியில்லை. இவருடைய பொல்லாத்தனம் - ரேணு ஊருக்குப் போன பிற்பாடு நேராக்கி வந்திருக்கிறார் இப்போ!

இருக்கட்டும். சிந்தனையைக் கலைத்தவர், என் சிந்தனைக்கு உரமூட்டி, குலையாத உறுதியே அளித்துவிட்டார். நிழலின் அருமையை வெய்யில் உணர்த்தும்; அறிவின்மையை அறிவொளியே காட்டும். என் அன்பு, அவருடைய அன்பின்மையிலேதான் தெரிகிறது!

**********

(சுதேசமித்திரன், ஜனவரி 20, 1957)